DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. S.Amalanatha Kamalakannan, B.A, B.L.,(Hon's)
District Munsif (FAC), Uthamapalayam.

**OS.No.130/2021**

**CNR.No: TNTH06-000004 -2021 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : S.மாரியப்பன் | Town | ஏரசக்கநாயக்கனூர் |
| Father's Name | : சுப்பிரமணி | Taluk | : |
| Age | : 56 | **PW1** | |

நாள் : 13.02.2026

**முதல் விசாரணை**

1) நான் இந்த வழக்கில் வாதி. வாதி தரப்பில் 1வது சாட்சியாவேன். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. அதைப்படித்துப் பார்த்து தான் கையொப்பம் போட்டேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். 25.03.1965ம் தேதி வாதியின் தகப்பனார் சுப்பிரமணி நாடார் அவர்கள், பால்மாற நாடார் அவர்களிடமிருந்து பெற்ற கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் மற்றும் Clear copy தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. 01.09.1973ம் தேதி சுப்பிரமணி நாடார் தனது மனைவியான 2ம் பிரதிவாதி பாக்கியலட்சுமிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி நகல் தாக்கல் செய்கிறேன் **(அது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** .

2) 12.09.1975ம் தேதி பாக்கியலட்சுமி அம்மாள் அவர்கள் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி நகல் தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. 12.03.2013ம் தேதிய சுப்பிரமணி என்பவரின்இறப்பு சான்றிதழின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் **(அது வா.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. 03.02.2020ம் தேதிய வழக்குரை சொத்துக்களுக்கு சுப்பிரமணியன்

அவர்கள் பெயரில் பெறப்பட்ட பட்டாவின் அசல் தாக்கல் செய்கிறேன். **(அது வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. வழக்குரை சொத்துக்களுக்கு சுப்பிரமணி பெயரில் 01.04.2014 முதல் 31.03.2015 ம் தேதி முடிய உள்ள காலத்திற்கு 30.03.2015 ம் தேதி செலுத்திய சொத்துவரி ரசீதின் அசல் தாக்கல் செய்கிறேன் **(அது வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.02.13 18:04:41 +0530

District Munisf (FAC),
Uthamapalayam.